2002 மே 2]

(இ) விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. பொன்முடி.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. முடிவு சொல்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சித்ரா பௌர்ணமி விழாவின்போது ஏற்பட்ட மோதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 26-4-2002 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற சித்ரா பௌர்ணமி விழாவில் கலந்துகொள்ள வந்தவர்கள்மீது நடந்த தாக்குதல் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி, திரு. கே. ஆறுமுகம், திரு. ஐ. கணேசன், திரு. ப. ரங்கநாதன், திரு. கோ. இரவிராஜ், டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. தி.வேல் முருகன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்து தகவல் தெரிவித்துள்ளார்கள். ஆக, மாண்புமிகு தலைவர்கள் இதைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அமைதியான சூழ்நிலை கெடத்தக்க அளவிற்கு செய்தித் தாள்களிலே பார்க்கிற செய்திகளைக் கொண்டேகூட ஒரு பதற்ற நிலை உருவாகிவிடும் என்று கருதக்கூடிய அளவிற்கு, கடந்த 26-4-2002 அன்றையதினம் மகாபலிபுரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த இளைஞர் அணி சார்பில் சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடுவதற்காக, அவர்கள் நடத்திய அந்த விழாவிற்கு தெற்குப் பகுதியிலேயிருந்து, புதுச்சேரி வழியாக,